## 13. என் மாம்சமோ பெலவீனமானது

### பல்லவி

என் மாம்சமோ பெலவீனமானது
உம் ஆவியோ உற்சாகமானது

### அனுபல்லவி

*என்னை பெலபடுத்தும் கிறிஸ்துவினாலே*
*எல்லாவற்றையும் செய்ய பெலன் உண்டு*

### சரணங்கள்

1. யோசேப்புக்குள் இருந்த உந்தன் ஆவியால்
தீய உறவுகளை எதிர்க்க வைத்தது
சிம்சோனுக்குள் இருந்த உந்தன் ஆவியால்
சிங்கத்தை ஆட்டை போல கிழிக்கசெய்தது
- என் மாம்சமோ

2. தானியேலுக்குள் இருந்த உந்தன்ஆவியால்
ராஜ போஜனத்தை வெறுக்க வைத்தது
தாவிதுக்குள் இருந்த உந்தன் ஆவியால்
பெரிய கோலியாத்தை விழுத்த செய்தது
- என் மாம்சமோ

3. மேல் வீட்டில் இறங்கின உந்தன் ஆவியால்
சீஷர்கள் தைரியமாய் பேச வைத்தது
உலகமெங்கும் உந்தன் வார்த்தையை
எடுத்து சென்று சாட்சி சொன்னது
- என் மாம்சமோ